# இந்திய அணிக்கு கொழும்பில் பலத்த பாதுகாப்பு

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 69 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 27 இதழ் 146
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11 — 07 — 1993

## அதிரடிப் படை காவல்

(கொழும்பு)
இலங்கை வந்துள்ள இந்திய கிரிக்கெட் அணிக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள துடன் அவர்களது போக்கு வரத்திற்கென ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்பட வுள்ளதாகவும் பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.
(4-ம் பக்கம் பார்க்க)

## நொச்சிமோட்டையில் இராணுவம் விரட்டியடிப்பு

(வவுனியா)
வவுனியா நொச்சிமோட்டையில் பதுங்கியிருந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை விரட்டியடித்தனர்.
நேற்றுக்காலை 8 மணியள
(4-ம் பக்கம் பார்க்க)

## ஊழல் மோசடியில் பொலிஸ் திணைக்களம்

(கொழும்பு)
இலங்கையில் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் உட்பட சகல தரத்திலானவர்களும் பெரும் ஊழல், மோசடி லஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டு வருவ
(4-ம் பக்கம் பார்க்க

## ● வடக்கு - கிழக்கில்

# யுத்தத்தை தொடர்ந்து நடத்த இராணுவம் திட்டமிடுகிறது

## - பிரிவினையை படைகள் எதிர்க்குமாம் -

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை தொடர்ந்தும் முழு வேகத்துடன் நடாத்தும் நோக்கில் படையினர் திட்டமிட்டு வருவதாகவும் அதற்கு தென்பகுதியில் பத்திரிகைகளும் உற்சாகமளித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஒரு தனி நாடெனப் படையினர் முழு வேகத்துடன் வும் அதனை எந்த விதத்திலும் போரிடுவர் என இராணுவத் பிளவுபட இராணுவம் அனு தளபதி ஜிகி வைத்யரத்ன மதியாதெனவும் இலங்கை கொழும்பு பத்திரிகை ஒன் றில் ஒருமைப்பாட்டை பேண றுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வே காணவேண்டுமென வும் சமாதானத் தீர்வு காண
(4-ம் பக்கம் பார்க்க)

## விமானப் படைக்கு 6 புதிய 'புக்காரா'

(கொழும்பு)
ஆர்ஜன்ரீனாவிடமிருந்து விரைவில் ஆறு புக்காரா யுத்த விமானங்களை இலங்கை விமானப்படை கொள்முதல் செய்யவுள்ளதாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.
ஏற்கனவே 4 புக்காரா விமானங்களைப் பெற்றுள்ள இலங்கைப் படையினர் இவை போர்த் திறனை கருத்திற்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. இயக்கம் தலைதூக்க சாத்தியம் எதுவும் இல்லையாம்

(கொழும்பு)
ஜே.வி.பி. இயக்கம் இலங்கையில் மீண்டும் தலைதூக்கும் சாத்தியம் ஏதுவும் இல் லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
அரசியல் ரீதியாகவோ அல் லது இராணுவ ரீதியாகவோ அவர்களால் செயற்பட முடியாதெனவும் ஜே.வி.பி. மீண்டும் அரசுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கும் சாத்தியமே
(4-ம் பக்கம்பார்க்க)

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விரைவில் நியமனம்

(கொழும்பு)
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
முன்பு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக திரு. விஜேதுங்க இருந்துவந்தார். திரு. பிரேமதாசாவின்
4-ம் பக்கம் பார்க்க)

## ஏழு தமிழ் இளைஞர் கனடாவில் கைது

(ரொறன்ரோ)
கனடாவில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஏழுபேர் கடந்த சில தினங்களுக்குமுன் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இதுகுறித்து சர்வதேச பொலிசார் இலங்கை பொலிசாருக்கு அறிவித்துள்ளனர். போலிக் கடவுச்சீட்டு, கள்ள விஸா வைத்திருந்ததற்காக இவர்கள் ரொறன்ரோ விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டனராம்.
இவர்களை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்ட போதே மேற்படி போலி ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனராம். (இ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு இரண்டாகப் பிளவுபட்டது!

(கொழும்பு)
ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஈ. பி. ஆர். எல். எவ். இல் இருந்து பிரியும் புதிய கட்சி தமது தலைவர் பத்மநாபா என்றும், அதனால் தமது புதிய கட்சியை 'ஈ. பி. ஆர். எல். எவ். நாபா' அணியினர் என்று அழைக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.
இந்தப் புதிய அணியின் தலைவராக வடக்கு—கிழக்கு மாகாணசபை முன்னாள் அமைச்சர் என். கே. அபூயூசுப் பொறுப்பேற்றிருக்கின்றார். தம்முடன் சுமார் இரு
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ கிழக்கில் சிங்களவர் தாக்கலாமென முஸ்லிம்கள் மத்தியில் அச்சம்

(கொழும்பு)
கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில்வாழும் முஸ்லிம்கள் சிங்களவரின் தாக்குதல்களுக்கு இலக்காகலாமென்ற அச்சம் எழுந்துள்ளதாக முஸ்லிம் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பது குறித்து சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்படக்கூடாதென அமைச்சர் ஹமீத் தலைமையில் அண்மையில் கூடிய முஸ்லிம் அமைச்சர்களும், எம். பிக்களும் வலியுறுத்தியதையடுத்தே இந்த நிலைமை அம்பாறை மாவட்டத்தில் எழுந்துள்ளதாம்.
இதுகுறித்து மேற்படி முஸ்லிம் தலைவர்கள் சுட்டிக்காட்டி
(4ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க புலனாய்வுத்துறை இலங்கை வருகிறது

(வாஷிங்டன்)
அமெரிக்காவில் இவ்வருட முற்பகுதியில் உலகச் சந்தையில்' இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக அதன் சூத்திரதாரியை தேடி அமெரிக்க புலனாய்வுத் துறையினர் இலங்கை வரலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.
சராக்கைச் சேர்ந்த ரமேஷ்
(4-ம் பக்கம் பார்க்க)

## தம்வசமுள்ள பல அமைச்சுகளை ஜனாதிபதி கைவிடுவார்

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்க தம் வசமுள்ள பல அமைச்சுப் பதவிகளைக் கைவிடவுள்ளதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கல்வி அமைச்சு, புத்த சாசன அமைச்சு, திட்டமிட
(4-ம்பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-251)

### துவரம் பருப்பு

ஆடி விதை தேடி விதை. சிறந்த வர்க்கத் துவரம் விதை அறிமுகப் பக்கற் ஒன்று பெற பத்து மிக்லைவற் நீலகோப் மேலுறைகளை சேர்ப்பிக்கவும். மில்க்வைற். (ஏ-3242)

### (O/L) MATHS

G. C. E. O/L'ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறுடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஸ்டேசன் ரோட் வீதி, சுண்டுக்குளி. (சி- 306)

### மணமகள் தேவை

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரி B. Sc. Second class Honours தற்பொழுது அவுஸ்திரேலியாவில் (Victoria University) Post Graduate course in Business computing பயிலும் மகனுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளை தேடுகின்றனர். பிறந்த திகதி June 1963 உயரம் 5' 7'', Complexion fair. நட்சத்திரம் திருவோணம், செவ்வாய் தோஷமில்லை. பட்டதாரி விரும்பத்தக்கது. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. கி - 283, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (கி-283)

— பெயர் மாற்றம் —

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் *G.V. Kanesalinkam* என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

*G.V. Kanesalinkam,*
298, காங்கேசன்துறை வீதி,
— யாழ்ப்பாணம். —

(சி 252)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் - 1992

## பரீட்சை அனுமதி அட்டை

கலை முதற் தேர்வு
வர்த்தக முதற் தேர்வு
வர்த்தகமாணி பகுதி 1
பொதுக் கலைமாணி பகுதி 1
சிறப்புக் கலைமாணி பகுதி 1

மேலே குறிக்கப்பட்ட பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டையையும், நேர அட்டவணையையும் 12-07-1993 இற்கும் 16 - 07 - 1993 இற்கும் இடையில் வெளிவாரிப் பரீட்சைப் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(ஏ 3246)

---

உதைபந்தாட்டம்:

## நாளை சாம்பியன் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் சாம்பியன் மோதல் நாளை ஞாயிற்றுக்கிழமை பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் எஸ். ரி. கனகநாதன் தலைமையில் நடைபெறும் இந்தச் சாம்பியன் மோதலில் சென். மேரிஸ் கழகமும், சென். அன்ரனிஸ் கழகமும் மோதுகின்றன. யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு. கே. என். வை. மொறிஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார். -வி

---

மாணவர் கல்விகற்க

## வெளிச்சவசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் மாணவர்கள் இரவில் கல்விகற்பதற்கு வசதியாக வெளிச்ச வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. இதனை தற்போது நூற்றி இருபது மாணவர்கள் பயன்படுத்திவருவதாகவும் மேலும் மாணவர் தொகை அதிகரிக்கும் போது இவ்வசதி அதிகரிக்கப் படவுள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

---

## உளவளத்துணை
## சான்றிதழ் பயிற்சி

எமது ஸ்தாபனம் நடத்திவரும் அடுத்த பயிற்சி வகுப்பு ஆகஸ்ட் / செப்டம்பர் மாதங்களில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இம்முறை வகுப்புக்கள் தமிழில் நடைபெறும். ஆனால் ஆங்கிலத்தில் தேர்ச்சி அவசியம். இவ்வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும் ஆறு மாத பயிற்சி முடித்தப் பின் ஒருவருட சேவைக்காலப் பயிற்சி (Internship) முடிந்த பின்பு தகுதி வாய்ந்தவர்கள் எனத் தெரிவானவர்கட்கு சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சியை மேற்கொள்ள விரும்புவோர், கீழ்க்கண்ட முகவரிக்கு 15 - 07 - 93 ற்கு முன் விண்ணப்பிக்கவும். (விண்ணப்பப் பத்திரத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்).

பயிற்சியாளர் தெரிவு செய்யும் பொழுது யாழ். பல்கலைக்கழக புறநிலை படிப்புக்கிளை அலகினால் நடத்தப்படும் உளவளத்துணை வகுப்புக்களில் பங்குபற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பணிப்பாளர்,
'சாந்தியகம்'
15 கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-303)

---

Jaffna College
Institute of Technology
Vaddukoddai

# Vacancy

POST OF DIRECTOR

A Vacancy exists for a suitable person to head the Institute.

**Qualification:** Recognised Engineering Degree and membership of recognised professional institute and experience in teaching and/ or industry.

**Salary Scale:** Rs. 7, 500/- — Rs. 12, 000/-
10 X 450

Selected candidate will be placed on a point commensurate with qualification and experience.

The selected candidate should reside in the JCIT premises.

**Closing Date:** 30 July 1993.

Application should reach either to

THE SECRETARY
JCIT
VADDUKODDAI
OR
THE PASTOR
17, FRANCIS ROAD,
COLOMBO - 6.

Secretary

(A- 3239)

---

## பயிற்சி நெறி


(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகினுக்கு நடைமுறைப்படுத்தும் பயிற்சி நெறி, சனசமூக நிலையங்களில் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் தாம் அங்கம் வகிக்கும் சன சமூக நிலையச் செயலாளர் ஊடாகச் சுய விபரங்களடங்கிய விண்ணப்பங்களை, யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒவ்வோர் வார இறுதி நாட்களில் நடைபெறவுள்ள பயிற்சி முடிவில் பங்கு பற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

---

## 6-ம் மாத நினைவஞ்சலி



அமரர் சண்முகம் பேரம்பலம்

மலர்வு: 26-04-1926 — உதிர்வு: 19-01-1993

உள்ளத்தால் உயர்வடைந்தோன், ஊக்கத்தால் திருவடைந்தோன் உண்மைஊரமெல்லத்தான் பேசுகினும் மேலோர்கள் மதிக்கின்ற ஈ. எஸ். பி எனும் இனிய உள்ளத்தான் ஒருவருக்கும் தீங்கிழையா உத்தமனாய் வாழ்ந்த சான்றோன் அவனத்தான் குறையா நல் அறிவகன்ற அண்ணலாய் எம்மை ஆதரித்திரே

நா. கந்தசாமியும் சக ஊழியர்களும்
E. S. பேரம்பலம் அன் கோ
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-305)

---

## புத்தகம் அச்சிடுதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் அளவிலான புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதற்கு அனுபவமிக்க அச்சகங்களிடமிருந்து பொறிபிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| புத்தகத்தின் அளவு | - 1/8 டெமி |
| பக்கம் | - 712 (ஏ - 04) |
| பிரதி | - 500 புத்தகங்கள் |
| படங்கள் | - 66 (தபால் அட்டை அளவில்) |
| புத்தகத்தின் கவர் | - காட் போட் |

கூறுவிலைகள், பல்கலைக்கழகத்தால் காகிதாதிகள் வழங்கப்படடால் எவ்வளவு, காகிதாதிகள் வழங்கப்படாவிட்டால் எவ்வளவு என்பதை தனித்தனியாக கொண்டதாக இருக்கவேண்டும். அத்துடன் காகிதாதிகள் அச்சகங்களால் வழங்கப்படுவதற்கான கூறுவிலையுடன் மாதிரி காகிதாதியும் இணைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களையும் புத்தகங்களின் உள்ளடக்கத்தையும் அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / கல்விக்கிளையில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் கூறுவிலையுடன் எவ்வளவு காலத்திற்குள் அச்சடித்து வழங்க முடியும் என்பதையும் தெரிவிக்கப்பட வேண்டும்.

கூறுவிலைகள் பொறிபிடப்பட்டு கடித உறையின் இடது புற மேல் மூலையில் "புத்தகங்கள் அச்சடித்தல்" என குறித்து, நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 21 - 07 - 93 திகதி காலை 10-00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கையளிக்கப்பட வேண்டும். கூறுவிலைகள் அதே தினம் காலை 10-30 மணிக்கு திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
09 - 07 - 1993.

(ஏ-3245)

**மணிவாக்கு**

உலகம் கெட்டுப் போயிற்று என்பவன் கெட்டவன்.
—அருள் விருந்து.

# நமது நோக்கு

## சந்திரிகா கவலை

"அரசு என்னை ஒரு முதலமைச்சராகச் செயல்பட அனுமதிக்கவில்லை. மாறாக என்னை ஒரு எழுதுவினைஞராகச் செயல்படும் விதமாக அரசு நடந்து கொள்கிறது!" —இது மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகாவின் கவலை!

ஜனநாயகம் சீராகப் பேணப்படுகிறது என அடிக்கடி உலகிற்கு அறிவித்துக் கொண்டிருக்கும் நாட்டிலே நடக்கும் அரசியல் நாடகத்தின் ஒரு காட்சி!

நாட்டுக்கென ஒரு அரசியல் திட்டம்—யாப்பு—அலசி ஆராய்ந்து நிறைவேற்றப்பட்டு, அதன் கீழ் செயற்பட்டு வரும் ஆட்சியின் இலட்சணம் இதுதானா?

இந்த லட்சணத்தில் —"ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் குதிக்க வாரீர்!" என்ற அழைப்பு வேறு!

13வது திருத்தச் சட்டப்படி அரசியல் அதிகாரங்கள் மாகாண அரசுகளுக்கும் பகிரப்பட்டுள்ளன என்று தான் வெளி உலகிற்குப் பிரசாரம் நடந்தது. தமிழ்ப் பகுதிகளுக்கும் ஓரளவு தன்னாட்சி அதிகாரம் கிடைத்தது என்று தான் நம்ப வைக்கப்பட்டது!

"13வது திருத்தச் சட்டத்திலே காணப்படும் சட்டத் தெளிவின்மை காரணமாக, மத்திய அரசாங்கம் மாகாண சபைக்குரிய அதிகாரங்களைப் பெருமளவு கட்டுப்படுத்தி உள்ளது"! —இது சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நிமால் சிறிபாலாவின் கருத்து.

இவர் நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரமல்ல; எதிர்க்கட்சியினரின் சட்ட ஆலோசகர். எனவே இவரிடமிருந்து வரும் கூற்றை வெறும் அரசியல் பேச்சு என்று எடுத்தெறிந்துவிட முடியாது.

இதை இங்கு சுட்டிக் காட்டுவதேன்? ஒரு வேடிக்கையான காரணத்தோடு தான்!

மாகாண சபைகள் அமைப்பதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்தவேளை, இதை எதிர்த்துவிடும் நீதிமன்றத்திற்குச் சென்றவர்கள் சுதந்திரக் கட்சியினர்.

இன்று —அதே மாகாண சபைத் தேர்தலில் பங்கு பற்றி, மேல் மாகாண சபையில் வெற்றி பெற்று, ஆட்சிக்கதிரையில் அமர்ந்த பின் தான் அதிகாரப் பரவலாக்கம் போதாது என்ற ஞானம் —தெளிவு பிறக்கிறது!

சணம் பித்தம்; சணம் வாதம்! நீண்டகாலக் கொள்கைகளை வகுக்காது அவ்வப்போது மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் தலைவர்களால் விளையும் கேடு இதுவாகும்.

இனியாவது, நாட்டின் வகுப்புவாதத்து நிலை உணர்ந்து, தெளிவாகச் சிந்திப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

# ஜெயலலிதாவின் பதவிக்கு விரைவில் ஆபத்து ஏற்படும் நிலை!

(புதுடில்லி)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை சட்டப்பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கக்கோரும் மனு மீது சட்டவல்லுநர்களின் ஆலோசனை பெற்று தாம் முடிவெடுக்க இருப்பதாக தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களைச் சந்தித்த டாக்டர் சென்னா ரெட்டி இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது!

செல்வி ஜெயலலிதா மீதான மனுக்கள் மீது முடிவெடுக்க மனு நான் காலம் கடத்தப் போவதில்லை. சட்டவல்லுநர்களின் கருத்துக்கு இணங்க இந்த மனுக்கள் ஆராயப்படும்.

அரசியல் சட்டத்தின்படி மாநில ஆட்சித்தலைவர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ அந்த முறையிலேயே நான் நடந்துகொள்ளவேண்டும் என்றார்.

தமிழ்நாடு ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டபின் முதன்முறையாக புதுடில்லி சென்ற டாக்டர் சென்னாரெட்டி நேற்று முன்தினம் ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா, பிரதமர் பி. வி. நரசிம்மராவ், உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் ஆகியோரை சந்தித்து தமிழ்நாட்டு நிலைமை குறித்து எடுத்துரைத்தார். (இ)

# தமிழக அரசைகலைக்க தி.மு.க. ஆதரவு தருவதாக தகவல்

(சென்னை)

தமிழ்நாட்டில் செல்வி ஜெயலலிதாவின் அரசை மத்திய அரசு கலைப்பதற்கு தி மு க வின் ஆதரவை திரு ஆலடி அருணா தெரிவித்ததாக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

தி மு. க.வின் செய்தித் தொடர்பாளரான திரு ஆலடி அருணா தி மு. க. தலைவர் மு. கருணாநிதியின் சிறப்புப் பிரதிநிதியாக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்ததாகவும் திரு. ராமமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் யார் ஆட்சிக்கு வருகிறார்கள் என்று தி.மு க. கவலைப்படவில்லை என்றும், ஆனால் ஆட்சியிலிருந்து செல்வி ஜெயலலிதா போகவேண்டும் என்பதே தி மு க. வின் விருப்பமென்றும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவரிடம் திரு. ஆலடி அருணா குறிப்பிட்டதாக திரு. ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் செல்வி ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு தி. மு. க வின் ஆதரவை இந்திரா காங்கிரஸ் கட்சி கோரியதாக திரு. மு. கருணாநிதி கூறியுள்ளதை திரு. ராமமூர்த்தி மறுத்தார். (இ)

# தமிழகத்தில் புலிகள் கட்டுப்பாட்டிலாம்

(புதுடில்லி)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் கட்டுப்பாட்டில் உள்ளன.

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி நேற்று முன்தினம் புதுடில்லியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழக அரசு தொடர்ந்து விழிப்புடன் இருந்து வருவதாலும், நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாலும் இது சாத்தியமாயிற்று என்றார்.

விடுதலைப் புலிகளின் பிரச்சினை குறித்து மத்திய அரசின் கருத்துபற்றிய கேள்வி ஒன்றுக்கு தமிழக ஆளுநர் பதிலளிக்கையில், பிரதமருடனும் உள்துறை அமைச்சருடனும் தாம் நடத்திய பேச்சுவார்த்தையில் இது சம்பந்தமாக மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே ஒரே மாதிரியான கருத்து உள்ளதென தமக்குத் தெரிவதாகக் குறிப்பிட்டார். -இ

கைதிகளுக்கு

# தொடர்பு சாதன வசதி

(கொழும்பு)

சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் இருக்கும் கைதிகளுக்கு ரி. வி. பார்ப்பதற்கும், வானொலி கேட்பதற்கும் பத்திரிகைகள் வாசிப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சு வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

இக்கைதிகளுக்கு மேற்படி வசதிகள் செய்து கொடுக்கப்படுவதோடு சிறைச்சாலைகளில் இருக்கும் அநேக கைதிகள் படிப்பறிவற்றவர்களாக இருப்பதனால் இவர்களுக்கு ஓய்வு நேரங்களில் கல்வி புகட்டும் வசதிகளையும் பாதுகாப்பு அமைச்சு செய்துகொடுக்கவுள்ளது. (வி-ரி)

# சைவ மகாநாடு இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் நடாத்தும் அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் மூன்றும் நாள் நிகழ்வு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் ஏ. சண்முகநாதபிள்ளை தலைமை வகிக்கின்றார். காலை நிகழ்வில் "வச்சிரத்தூண்" என்ற விடயத்தில் க. இராமலிங்கமும் உரையாற்றுவதோடு விழாவுக்கு பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி. வேலாயுதம் பங்கு கொள்கின்றார். மற்றும் பலரின் உரைகளும் சைவசமயப் பாடப் பரீட்சையில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. -ம

ராஜீவ் கொலை வழக்கு:

# முக்கிய துப்புக்கள் மறைக்கப்பட்டன

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணையை புதிதாக விசாரணை செய்ய வேண்டுமென்று குற்றவாளிகள் சார்பில் வாதிடும் வழக்கறிஞர் சந்திரசேகர் வழக்கை விசாரணை செய்து வரும் நீதிமன்றத்திடம் கேட்டுள்ளார்.

சந்திரசேகர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வழக்கை விசாரணை செய்த தனி விசாரணைக்குழு பல முக்கிய துப்புக்களை மறைத்துவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள்மீது பழியைப் போடவே இவ்வாறு செய்துள்ளது.

1991ம் ஆண்டு ஜூலை மாதம் இந்திய நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், ராஜீவ்காந்தி கொலை பற்றிக் குறிப்பிடுகையில் விடுதலைப்புலிகள் இயக்கம் அல்லாத வேறு ஒரு வெளிநாட்டு நிறுவனம் அல்லது வலிமை மிக்க வெளிநாட்டுச்சக்தி இந்த கொலைச்சதியில் ஈடுபட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த விசாரணைக்குழு அமைச்சர் சவானை இதுசம்பந்தமாக விசாரணை செய்யவில்லை அத்துடன் வேறு பல விடயங்களையும் இந்தக்குழு விசாரணை செய்யவில்லை -வி

# காலாவதியான காசோலை; மேற்பார்வையாளர் அவதி

(மட்டுக்கோட்டை)

1992 டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த (சாதாரணதர) பரீட்சையில் பணிபுரிந்த மேற்பார்வையாளர்கள், நிரந்தரநோக்குநர்கள், சாதாரண நோக்குநர்களுக்கான கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும் அக்காசோலைகளின்கால எல்லை காலாவதியானதால் அவற்றை மாற்றிக்கொள்ளமுடியாது பரீட்சை மேற்பார்வையாளர்கள் திண்டாடுகின்றனர். (139)

# புதிய சந்தை

(ஆனைப்பந்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் சென்ற மாதம் தொடக்கம் புதிய சந்தை ஒன்று இயங்கிவருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவியில் இச்சந்தை அமைக்கப்பட்டது.

மரக்கறிக்கெனவும் தனியாக மற்றொரு சந்தையும் அமைக்கப்படவுள்ளது. (101

# இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ்சோதிடர் ஒன்றியத்தின் ஒன்பதாவது வாராந்த சோதிட ஆய்வரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும்.

இன்றைய ஆய்வரங்கின் கருப்பொருளாக திருமணத்திற்கும் விவாகச்சக்கரமும் என்னும் தலைப்பு இடம் பெறும். ஆய்வரங்கை முன்னாள் இலங்கை வங்கி ஊழியர் கி. பத்மநாதன் நெறிப்படுத்துவார். -எஸ்

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஞானக்குழந்தை இல்லம் பாலர் பாடசாலையினதும் கலைமகள் பாடசாலையினதும் 2வது வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறும். -162

0 0 0

(யாழ்ப்பாணம்)

வேதாந்த நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு 11ம் திகதி காலை 9 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரமானந்த நிலையத்தில் வைத்திய கலாநிதி திரு வ. சின்னப்பு தலைமையில் நடைபெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

நாயன்மார்கட்டு சனசமூக நிலையம் நடாத்தும் மாதாந்த அறிவியலரங்கு தொடர் 14 இன்று 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-45 மணிக்கு நிலையத் தலைவர் திரு. இ. அரசகுலசூரியன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வைத்திய ஜோதி திருமதி திலகவதி கோபாலரத்தினம் "சத்துணவு" என்ற தலைப்பில் உரையாற்றுவார். -154

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை அருள்மிகு ஸ்ரீ நெடுங்குளம் அம்பலவாணர் விக்கினேஸ்வர ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-45 மணி தொடக்கம் 9-55 மணி சுபவேளையில் இடம்பெறும் -154

# இராசி பலன்

11-07-1993

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆனி 27)

ஸப்தமி பி. ப. 2-32வரை, உத்தரட்டாதி மு. ப. 9-46 வரை, இராகுகாலம் மாலை 4-29 முதல் 5-59 வரை, சுபநேரம் காலை8-59 முதல் 10-29 வரை.

மேடம்- நிந்தனை, தொழில் முடக்கம், காரியதாமதம்.

இடபம்- பாச நெகிழ்ச்சி, சுபச்செலவு, மனவேகம்.

மிதுனம்- வருமானநோக்கம், இன்ப வாழ்வு, சகோதர உதவி.

கடகம்- வீண்வம்பு, உடல் நலம் பாதிப்பு, அதிக செலவு.

சிம்மம்- கடன் சஞ்சலம், மனக்கவலை, உறவினர் கேடு.

கன்னி- மேலமட்டத்தார் ஆதரவு, மனவேற்றுமை, பணவரவு

துலாம்- புதிய உறவு ஆலய தரிசனம், உறவினர் மகிழ்ச்சி.

விருச்சிகம்- மனக் கொதிப்பு, சத்துருக்கள் தொல்லை, அவதி!

தனுசு- பெண் ஆதரவு, மேலான நிலை, தியாகம்.

மகரம்- நிதானம் இழத்தல், தீவிர சிந்தனை, குடும்ப சுகம்.

கும்பம்- தெய்வ தியானம், பழி தீர்த்தல், நரம்புத் தளர்ச்சி.

மீனம்- சுபபோசனம், தொழில் சிறப்பு, மன நிம்மதி.

— ஜோதிடர்

# இனவெறி தாக்குதலை கண்டித்து கனடாவில் தமிழர் பேரணி

(ரொறன்ரோ)

கனடாவில் இலங்கைத் தமிழர் மீதான இனவெறித் தாக்குதல்களை நிறுத்தக்கோரி கடந்த மாதம் 28ம் திகதி ரொறன்ரோ நகரில் இலங்கைத் தமிழ் அமைப்புகள் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடாத்தியுள்ளன.

சமீபகாலமாக இலங்கைத் தமிழ் அகதிகள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் இனரீதியான தாக்குதல்களால் ஐந்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஜேர்மனியில் நடைபெறும் தாக்குதல்கள் போன்றே வெள்ளை இனத்தவர்களால் இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகிறது.

இவ் ஆர்ப்பாட்ட பேரணியில் பெருமளவு தமிழ் மக்கள் கலந்து கொண்டதுடன் கண்டன பதாகைகளையும் எடுத்துச் சென்றனர். (கி)

## அகதிகள் நலனை கவனிக்க யு. என். எச். சி. ஆர். குழு மன்னார் விஜயம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து அடுத்த மாத நடுப்பகுதியில் தம்மவருக்கு திருப்பி அனுப்படவுள்ள சுமார் 4000 தமிழ் அகதிகளின் நலனை கவனிக்கும் முன்னேற்பாடாக கொழும்பிலிருந்து யு.என்.எச்.ஆர் குழு ஒன்று நேற்று முன்தினம் மன்னார் சென்றுள்ளது.

மேற்படி 4000 அகதிகளும் யு.என்.எச்.சி.ஆர். கப்பல் மூலம் இராமேஸ்வரத்திலிருந்து இங்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர். இவர்கள் அனைவரும் மன்னாரை சேர்ந்தவர்கள்.

இதை தொடர்ந்து ஏனைய அகதிகளும் திருப்பி அனுப்பப்படவுள்ளனர். (சி)

### அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைட் யூசுப் என்பவர் தற்போது இலங்கைக்குத் தப்பி வந்துள்ளதாகவும் இவரைப் பிடித்து ஒப்படைக்குமாறும் அமெரிக்கா இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் மேற்படி நபர் இலங்கைக்குத் தப்பி வந்ததாக கூறப்படுவதை கொழும்பிலுள்ள ஈராக்கிய தூதரகம் மறுத்துள்ளது. (கி)

### கிழக்கில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் முஸ்லிம்களின் எதிர்கால நலனை கருத்திற் கொண்டு இணைப்பே அவசியமெனவும் கூறியுள்ளனர். (கி)

### தம்வசமுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் தொழிலாளர் நலன் தொடர்பான அமைச்சுக்களை ஜனாதிபதி கைவிட்டு அவற்றுக்குப் புதிய அமைச்சர்களை நியமிக்கவுள்ளாராம்.

எனினும் அவர் தொடர்ந்தும் நிதியமைச்சர் பதவியை வகிப்பார் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கி)

## பயணி மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்காக கிளாலி கடலில் பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் மாரடைப்பால் மரணமாகியுள்ளார்.

நல்லூர் அம்மன் வீதியைச் சேர்ந்தவரான ச. புவனேஸ்வரன் (45-வயது) என்பவரே படகில் அக்கரை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் மரணமானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (56-கி)

# 900 பொஸ்னியர் சாகும்வரை உண்ணாவிரதம்

(லண்டன்)

900 பொஸ்னிய அகதிகள் சாகும்வரையான உண்ணாவிரதம் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

10 லட்சம் பொஸ்னியர் பட்டினிச்சாவுக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில் இதுகுறித்து சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் எதுவித அக்கறையும் செலுத்தவில்லையெனவும் உலகின் கவனத்தை பொஸ்னியர் பக்கம் திருப்புவதற்காகவே தாம் இந்த உண்ணாவிரத நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக உண்ணாவிரதிகள் தெரிவித்துள்ளனர். —உ-கி

# இணைப்பு குறித்து ஜனாதிபதி 'விஜய'வுடன் காமினி பேசுவார்?

(கொழும்பு)

ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் திரு. காமினியின், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை இணைப்பது அல்லது கூட்டணி அமைப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனநாயக முன்னணி தனது தலைவர் காமினி திசநாயக்காவை நியமனம் செய்திருக்கின்றது.

இதன் மூலம் ஐக்கிய தேசிய முன்னணியும் இணையும் சாத்தியக்கூறுகள் உண்டென தெரிவிக்கப்படுகிறது. இந்த இணைப்பு குறித்து ஐ. தே. க. சார்பில் ஜனாதிபதி விஜயதுங்க பேசவுள்ளதும் தெரிந்ததே. (ம-கி)

# தமிழ் பொதுமகன் சுட்டுக் கொலை

(மட்டுநகர்)

மட்டு. மாவட்டம் பெரிய போரதீவுப் பகுதியில் ராணுவத்தினரும், தேசவிரோதிகளும் பதுங்கியிருந்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

நேற்று முன்தினம் காலை 6-30 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் வெல்லாவெளியைச் சேர்ந்த செல்வநாயகம் மகேசநேசன் என்பவரே கொல்லப்பட்டவராவார். (ரி-கி)

## ஷெல் தாக்கு

(அரியாலை)

நேற்றுப் பகல் 12 40 மணியளவில் மண்டைதீவு இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இச் ஷெல் துரையப்பா விளையாட்டரங்கில் வந்து வீழ்ந்து வெடித்ததாகவும் புகை கிளம்பியவண்ணம் இருந்ததாகவும் விறகு சேகரிக்கச் சென்ற ஒருவர் தெரிவித்தார். (59கி)

### பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலையை அடுத்து அவர் ஜனாதிபதியானதுடன் பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் பொறுப்பேற்றதாக இராசாங்க அமைச்சர் பதவி காலியானது.

தற்போது அப்பதவிக்கு வேறொருவர் நியமிக்கப்படவுள்ளாராம். (சி)

### ஈ.பி,ஆர்.எல்.எவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நூறு ஆதரவாளர்கள் இருப்பதாகவும், இலங்கை அரசியல் சட்டத்தில் உள்ள 13-வது திருத்தத்தின்படி வடக்கு—கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக தனிப்பிராந்தியமாக ஏற்பது மற்றும் வடக்கு—கிழக்கு பிராந்தியத்துக்கு முழுமையான அதிகாரம் வழங்கவும் தமது கட்சி போராடும் என்றும் யூசுப் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஈ. பி. ஆர். எல். எவ்பிலிருந்து பிரிந்து டக்ளஸ் தேவானந்தா ஈ. பி. டி. பி. என்ற கட்சியை அமைத்ததும் தெரிந்ததே. —(ம-கி

### நொச்சிமோட்டையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் நொச்சிமோட்டை சின்னக்குளம் சந்தியில் விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் நடத்துவதற்கென இராணுவத்தினர் பதுங்கியிருந்தனர். இதனை அறிந்த விடுதலைப்புலிகள் உடனடியாக இராணுவத்தினர் பதுங்கியிருந்த இடத்திற்குச் சென்று தாக்குதல் நடத்தினர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலையடுத்து நொச்சிமோட்டையிலிருந்த இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். (வி கி)

# ஐ. தே. கவுடன் இணைய சு.கவில் சிலர் முடிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு பிரிவு ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்வதற்கு ஆயத்த நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடந்துமுடிந்த மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயற்குழு நடந்து கொண்ட விதமும் அநுராவின்குடும்பசெல்வாக்கு கட்சியில் மேலோங்கி இருப்பதாலும் வெறுப்படைந்த உறுப்பினர்களே இவ்வாறு இணைவதற்கு ஆயத்த நிலையில் உள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் கட்சி தாவல் தடைச் சட்டத்தை நீக்க 150 வாக்குகள் வேண்டும். இதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 19 பேர் ஆதரித்து வாக்களித்தால் சட்டம் நிறைவேறிவிடும் என்றும் கூறப்படுகின்றது. (மசி)

### விமானப் படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டே புதிதாக 6 புக்காராவை கொள்முதல் செய்யவுள்ளனராம்.

புக்காரா மணித்தியாலத்திற்கு 500 கி. மீ. செல்லும். 1,500 கிலோ எடையுள்ள குண்டுகளை காவிச்செல்லும். இதில் 125 கிலோ எடையுள்ள 12 குண்டுகள் ஒரே நேரத்தில் கொண்டுசெல்ல முடியுமெனவும் மேலும் விமானத்தில் 6 துப்பாக்கிகளும், ரொக்கட், ஏவுகணை, கண்ணிவெடி செலுத்திகளும் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

### ஊழல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது

தற்போது நாட்டின் பல பகுதியிலும் பொலிசாரிடம் ஒழுக்கமும், கட்டுப்பாடும் இல்லையெனவும் பொலிஸ் திணைக்களம் தன்னிச்சையாகவே செயற்பட்டு வருவதாகவும் பத்திரிகைகளும் குற்றம் சாட்டியுள்ளன.

இதுகுறித்து ஜனாதிபதி விஜயதுங்கவின் கவனத்திற்கு பல புகார்கள் கொண்டுவரப்பட்டுள்ளனவாம். (கி)

### வடக்கு—கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதெனவும் சுதந்திரக்கட்சி எம். பி. திரு. குணசேகரா நாடாளுமன்றில் கூறியுள்ளதுடன் ஒரு லட்சம் படையினரை இப்போரில் ஈடுபடுத்தி நாட்டை பாதுகாக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

இதேபோன்ற கருத்துப்பட அண்மைக்காலமாக கொழும்பிலிருந்து வெளியாகும் பல சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் கூறி வருகின்றன. —கி

### ஜே. வி. பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையெனவும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் ஜே. வி.பி. யின் புதிய தலைவர் சோமவன்ச அமரசிங்க ஒலிப்பதிவு நாடா ஒன்றின் மூலம் ஆற்றிய உரையில் ஜே. வி. பி. மீண்டும் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக கூறியிருந்தார்

எனினும் இதற்கான எந்தவொரு சாத்தியமுமில்லையென முப்படையினதும் சிரேஷ்ட அதிகாரிகள் கூறியுள்ளனர், (சி)

### இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிராகத் தாக்குதல் ஏதும் நடைபெறலாம் என்ற அச்சத்தை அடுத்தே நவீன ஆயுதங்கள் தாங்கிய அதிரடிப் படையினர் பலர் இந்திய அணிக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கி வருகிறார்கள்.

கடந்த வெள்ளி கொழும்பு வந்த இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் 40 தினங்கள் தங்கியிருக்கும். தற்போது இவர்கள் கொழும்பில் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் மூன்றாவது மாடியில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இருக்கிறார்கள்.

ஹோட்டலைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்புச் செய்யப்பட்டுள்ளது. கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் மைதானங்களுக்கும் பலத்த காவல் போடப்படவுள்ளதாம். கொழும்பிலிருந்து ஏனைய நகரங்களுக்கு போட்டிகளில் பங்குபற்ற இந்திய அணியினர் செல்லவுள்ளனர். அதனால் அவர்களின் பாதுகாப்பின் நிமித்தம் ஹெலிக்கொப்டர்கள் மூலம் அழைத்துச் செல்லப்படவுள்ளனராம். (சி)

## மரண அறிவித்தல்

### சண்முகம் புவனேஸ்வரன்

வண்ணார்பண்ணை ஐயனார்கோவிலடியை பிறப்பிடமாகவும், அம்மன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் நல்லம்மாவின் கனிஷ்ட புதல்வன் புவனேஸ்வரன் காலமாகிவிட்டார். அன்னார் பத்மலோஜினியின் (பத்மா—அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், சசிகலா (நோர்வே), சுபத்திரா, நயினசபேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிதரனின் (நோர்வே) அன்பு மாமனும், பிரியங்காவின் (நோர்வே) அன்பு பேரனும், தில்லைநாதன் (திருகோணமலை), தனலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், றேணுகாதேவி, தபேந்திரன், இராமலிங்கம் தங்கரத்தினம், சுப்பிரமணியம் புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தாவின் வளர்ப்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-7-93) ஞாயிறு மாலை 2 மணிக்கு 42/3, அம்மன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
பத்மலோஜினி
(மனைவி)

42/3, அம்மன் வீதி,
கந்தர்மடம். (கி-304)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் விதாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B